2002 அக்டோபர் 29]

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் கிராமம் அருகிலுள்ள கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் தற்போது புதிதாக எந்தக் கிராமத் தொழிலும் தொடங்க உத்தேசமில்லை. வாரியத்தின் நிதி நெருக்கடி நிலைமை காரணமாகவும், ஏற்கெனவே தொடங்கப்பட்ட கதர் கிராமத் தொழில் அலகுகளை மட்டுமே நன்கு செயல்படுத்திட வாரியம் கருதுவதாலும், இயங்கி வரும் அலகுகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாததாலும், புதிதாக அலகுகளை ஆரம்பிக்க இயலாத நிலையில் வாரியம் உள்ளது. மேலும், கதர் கிராமத் தொழில் ஆணையம் அறிவித்திருக்கும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்படி வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற தனி நபர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு வாரியத்தின் மூலம் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

65—

கால்நடை மருத்துவமனை

***19068—திரு வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியம், குப்பச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே ஒவ்வொரு துறையாக ஆய்வு செய்து, நலிந்த விவசாயிகள்மீது அக்கறை கொண்ட அரசு இது என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, அவர்கள் பெற்ற கடனுக்குண்டான வட்டி, அபராத வட்டி, ரூ.311 கோடியைத் தள்ளுபடி செய்தும், விவசாயிகள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக, 20 இலட்சம் ஹெக்டேர் நிலங்களை மேம்படுத்தவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடனே மாபெரும் திட்டங்களை அறிவித்து, ரூ.311 கோடி தள்ளுபடி செய்து, விவசாயிகளுடைய வயிற்றில் பாலை வார்த்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. எங்கள் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில், 9 ஊராட்சிகளுக்கு மையமாக இருந்து கொண்டிருக்கிற குப்பச்சிப்பாறை கிராமத்தில், குறைந்தது 15 ஆயிரம் கால்நடைகளை வைத்துக் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் கால்நடைகளை சிகிச்சைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 15 முதல் 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையைப் போக்குகின்ற வகையில் அந்தக் கிளை மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, மருத்துவமனையாக உயர்த்திக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிற கால்நடைத் தொழிலை மேம்படுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதாக அது அமையும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்த ஆண்டு பரிசீலித்து, அமைக்கப்படுமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி தொகுதியைச் சேர்ந்த வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் உள்ள குப்பச்சிப்பாறை கிராமத்தில் ஏற்கெனவே கால்நடைக் கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

2002 அக்டோபர் 29]

குப்பச்சிப்பாறை கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குருக்கனப்பள்ளி என்னும் இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய குப்பச்சிப்பாறை என்ற கிராமத்தில் 15 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில் மறு சீரமைப்புப் பணி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் கால்நடை விரிவாக்க அலுவலர்களைக் கால்நடை பராமரிப்புத் துறைக்கே திருப்பி அனுப்புவது பற்றிய கருத்துரு உள்ளாட்சித் துறையின் ஆய்வில் உள்ளது. மேற்படி கால்நடை விரிவாக்க அலுவலர்கள் இத்துறைக்குத் திரும்ப வந்த பிறகு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது பற்றி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து முடிவெடுக்க உள்ளது. அவ்வாறு ஆய்வு செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குப்பச்சிப்பாறை கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவது பற்றி, நிதி நிலைக்கு ஏற்றாற்போல் பரிசீலித்து, முடிவெடுக்கும் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

66—

மாணவியர் விடுதி

***20382—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS